# தொலை தொடர்பு ஒழுங்குமுறை ஆணைய செயல்பாடு கருத்தரங்கம்




இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்த கருத்தரங்கம் நேற்று தீரன்சின்னமலை கல்லூரியில் நடைபெற்றது.

திருப்பூர், ஆக.30:தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மையம், நல்லூர் நுகர்வோர் நல மன்றம் மற்றும் தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைந்து நேற்று கல்லூரியில் இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்த கருத்தரங்கை நடத்தியது.

இந்த கருத்தரங்கிற்கு கல்லூரியின் முதல்வர் ராச்சல் நான்சி பீலிப் தலைமை வகித்தார். கொங்கு வேளாளர் அறக்கட்டளை பொருளாளர் கந்தசாமி, நல்லூர் நுகர்வோர் நல மன்ற தலைவர் சண்முகசுந்தரம், செயலாளர் வேல்முருகன், பொருளாளர் நாகராசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கருத்தரங்கிற்கு வந்த சிறப்பு விருந்தினர்களை கல்லூரி மாணவி ஷிவாணி வரவேற்றார்.

இக்கருத்தரங்கில் இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைய உறுப்பினர் ரமேஷ் கலந்து கொண்டு பேசியதாவது:இந்தியாவில் தொலைத்தொடர்பு சேவைகள் மற்றும் கட்டணங்களை ஒழுங்குபடுத்துவதற்காக 1997ம் ஆண்டு பிப்ரவரி 20ம் தேதி பாராளுமன்ற சட்டத்தின் மூலம் இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் நிறுவப்பட்டது. முன்னதாக, தொலைத்தொடர்பு சேவைகள் மற்றும் கட்டணங்களை ஒழுங்குபடுத்துவது ஒன்றிய அரசின் மேற்பார்வையில் இருந்து வந்தது.

தொலைத்தொடர்பில் வெளிப்படையான சூழலை வழங்குவதே இதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். எனவே, மொபைல் போன் பயன்படுத்தும் போது குறைபாடுகள் இருந்தால் நாம் நுகர்வோர் குறைதீர் மன்றங்களையும் அணுக முடியும்.இவ்வாறு அவர் பேசினார்.

இதைத் தொடர்ந்து பி.எஸ்.என்.எல் சந்திரசேகர், செந்தில்குமார் மற்றும் குருசாமி ஆகியோர் கலந்து கொண்டு மொபைல் போன் பயன்பாடு மற்றும் இணைய வழி குற்றங்களை தடுக்கும் முறைகள் குறித்தும், இணைய வழியில் நமது தகவல்கள் பாதுகாப்பாக இருக்கும் நிலைகள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். கருத்தரங்கின் முடிவில் கல்லூரியின் பேராசிரியை சந்திராகலா நன்றி கூறினார்.

இக்கருத்தரங்கில் வேதியியலாளர் அகிலன், கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிட்ட 250க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர்.